**P5 Merged Stream**

**Primary School**

**Primary 5 : Continual Assessment 1**

**Tamil Language Paper 2**

**Name** : ________________________ (   )

**Class** : 5 / ____

**Marks** : ____ / 90

**Booklet A**

**Total Time : 1 h 40 min**

**This booklet consists of 10 pages**

DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.

FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.

ANSWER ALL THE QUESTIONS.

**Parent's Signature :** ________________________

**Date :** ____________________

19

www.testpapersfree.com

## தொடக்கப் பள்ளி

## ஐந்தாம் வகுப்பு - தாள் 2

பெயர் : ____________________ தேதி : __________

வகுப்பு : 5 - ____

பின்வரும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

1. இடைவேளை
2. மணி " கிரீங் கிரீங் " என ஒலித்தது
3. வரிசையில் நின்று
4. சண்டை போடத் ஆரம்பித்தார்கள்
5. மீ சூப்புடன் திரும்பியபோது
6. ஆவி பறந்தது
7. இடித்துவிட்டான்.
8. தரையில் கொட்டிவிட்டது
9. அதிர்ச்சி அடைந்தாள்
10. கட்டடமே அதிரும்படி



P5

CA- 1

தேர்வுத்தாள் - 2

1 முதல் 32 வரையுள்ள வினாக்களுக்கு **OAS** விடைத்தாளில் , சரியான விடையின் எண்ணுள்ள ( 1, 2, 3 அல்லது 4 ) நீள்வட்டத்தை நிழலிடு

“ அ ” பிரிவு

வேற்றுமை

1 முதல் 6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து , அதன் பின்னர் , **OAS** விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(12 மதிப்பெண்கள்)

மணியும் கணபதியும் தோழர்கள். ஒருநாள் , மணி பள்ளிக்குத் தன் ____ (1) ____ செல்ல விரும்பினான். எனவே , அவன் ____ (2) ____ வீட்டிற்குப் போனான். அப்போது கணபதி சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

மணி கணபதியைப் பார்த்து , “ பள்ளிக்கு நேரமாகிவிட்டது. இன்னும் சாப்பிடுகிறாயே ! சீக்கிரம் புறப்படு ! ” என்று தன் ____ (3) ____ அவசரப்படுத்தினான். சில நிமிடங்கள் கழித்துச் சிறுவர்கள் பள்ளியை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். வழியில் கணபதி ஒரு கடையைப் பார்த்ததும் நின்றான். “ இந்தக் ____ (4) ____ விற்கப்படும் வடை மிகவும் ருசியாகயிருக்கும் , ” என்று கூறினான். பின்னர் , ____ (5) ____ ஒரு வெள்ளியை வெளியில் எடுத்தான். இதைப் பார்த்த ____ (6) ____ கோபம் வந்துவிட்டது. “ இப்போதுதான் வீட்டில் சாப்பிட்டாய். அதற்குள் இன்னொரு உணவா ! ” என்று சிடு சிடுவென்று பேசினான்.

1. (1) சினேகிதனால்
   (2) சினேகிதனுடன்
   (3) சினேகிதனுக்கு
   (4) சினேகிதனை ( )



21

www.testpapersfree.com

2. (1) கணபதியின்
(2) கணபதிக்கு
(3) கணபதியை
(4) கணபதியிடமிருந்து ( )

3. (1) தோழனுக்கு
(2) தோழனை
(3) தோழனிடம்
(4) தோழனால் ( )

4. (1) கடையின்
(2) கடைக்கு
(3) கடையிலிருந்து
(4) கடையில் ( )

5. (1) பணப்பையில்
(2) பணப்பையின்
(3) பணப்பைக்கு
(4) பணப்பையிலிருந்து ( )

6. (1) மணியை
(2) மணியால்
(3) மணிக்கு
(4) மணியுடைய ( )



22

www.testpapersfree.com

செய்யுள் / பழமொழி

செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

7. மகன்தந்தைக்கு ______ உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனுஞ் சொல்.

(1) செய்யும்
(2) புரியும்
(3) ஆற்றும்
(4) அளிக்கும் ( )

8. ______ ஆகாததும் ஆகும்.

(1) எண்ணமிருந்தால்
(2) முயற்சியிருந்தால்
(3) அறிவிருந்தால்
(4) அன்பிருந்தால் ( )

9. ஆழம் அறியாமல் காலை ______.

(1) நீட்டாதே
(2) விடாதே
(3) வைக்காதே
(4) ஊன்றாதே ( )

10. அடக்கம் ஆயிரம் ______ தரும்.

(1) பொன்
(2) நன்மை
(3) பலன்
(4) புகழ் ( )



www.testpapersfree.com

11. மந்திரிக்கு அழகு வரும்பொருள் ______.

(1) அறிதல்
(2) மொழிதல்
(3) உணர்தல்
(4) உரைத்தல்  ( )

12. செயற்கரிய செய்வார் __________ சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(1) சான்றோர்
(2) பெற்றோர்
(3) பெரியோர்
(4) பெரியர்  ( )

## தெரிவுவிடைக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி

போர்க்களத்தில் வெற்றிபெற்ற களிப்பில் தளபதி தன் வீரர்களுடன் நாட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தான். களைப்பைப் போக்க அவன் ஓர் ஏரிக் கரையில் கூடாரம் அமைத்தான். அவன் ஏரியில் நீராடக் கரையை நோக்கிப் போனான். ஏரியின் நடுவில் ரத்தின மாலையொன்று பளபளத்துக்கொண்டிருப்பதைக் கண்டு வியப்படைந்தான். அவன் தன் வீரர்களை அழைத்து ஏரியின் நடுவிலுள்ள ரத்தின மாலையைக் கொண்டு வரும்படிக் கட்டளையிட்டான். வீரர்கள் உடனே ஏரிக்குள் குதித்தார்கள். ஆனால் , அவர்களால் அந்த மாலையைக் கொண்டுவர முடியவில்லை.

ஏரியிலுள்ள நீரை இறைத்தால் ரத்தின மாலை கிடைக்கும் என்று தளபதி திண்ணமாக நம்பினான். உடனே வீரர்கள் அனைவரையும் ஏரியிலிருந்து நீரை இறைக்கும் முயற்சியில் அவர்களை ஈடுபடுத்தினான். வீரர்கள் ஏரியிலிருந்து தண்ணீர் முழுதையும் இறைத்துவிட்டார்கள். பிறகு அவர்கள் சேற்றில் இறங்கி



www.testpapersfree.com

ரத்தின மாலையைத் தேடினார்கள். இருப்பினும் ரத்தின மாலை கிட்டவில்லை. மீண்டும் ஏரியில் தண்ணீர் ஊறி நிரம்பியது. அதன் நடுவில் ரத்தின மாலை தெரிந்தது. " கடவுளே ! இது என்ன மாயம் ! " என்று தளபதி குழம்பினான்.

அவ்வழியாக ஒரு முதியவர் வந்தார். தளபதி அவரிடம் ஏரியின் நடுவில் தெரிகின்ற ரத்தின மாலையைக் காண்பித்தான். அவரிடம் தாம் மேற்கொண்ட முயற்சிகளைப் பற்றியும் கூறினான். அதைக் கேட்டு முதியவர் சற்று நேரம் சிந்தித்தார். " ரத்தின மாலை ஏரிக்குள் இருக்க வாய்ப்பில்லை. அப்படியிருந்தால் தளபதிக்கு ரத்தின மாலை கிடைத்திருக்கும். வேறு எங்கே இருக்கும் ? " என்று முதியவர் நாலா பக்கமும் நோக்கினார்.

முதியவர் ஏரிக் கரையில் உயர்ந்து வளர்ந்திருந்த பனை மரத்தைப் பார்த்தார். அதன் பின்னாலிருந்து கதிரவனின் ஒளிக் கதிர்கள் வீசிக்கொண்டிருந்தன. அவற்றின் ஒளி ஏரியில் விழுந்தது. முதியவருக்கு உண்மை புரிந்தது. ஏரிக்கரையில் பனை மரத்திலுள்ள குருவிக் கூட்டில்தான் மாலை இருக்கவேண்டும். அதன் பிம்பமே ஏரியில் தெரிகிறது என்ற முடிவுக்கு வந்தார். அவர் தளபதியிடம் , " ஐயா ! நீங்கள் உங்கள் வீரர்களில் ஒருவனை அங்கே தெரிகின்ற பனை மரத்தில் ஏறிப் பார்க்கச் சொல்லுங்கள் , " என்றார். மறுகணமே , வீரனொருவன் விறு விறுவென்று பனை மரத்தில் ஏறினான். மரத்தின் உச்சியில் பருந்தின் கூடு ஒன்று இருந்தது. அதிலிருந்து ரத்தின மாலை தொங்கிக்கொண்டிருந்தது. அவன் அதை எடுத்து வந்து தளபதியிடம் ஒப்படைத்தான். தளபதி முதியவரின் அறிவுக் கூர்மையைக் கண்டு வியந்தான். தளபதி நீட்டிய சன்மானத்தை ஏற்றுக்கொள்ளாமல் அவர் அவ்விடத்தை விட்டு அகன்றார்.



www.testpapersfree.com

13 முதல் 17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர் , **OAS** விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. **(10 மதிப்பெண்கள்)**

13. தளபதியின் மகிழ்ச்சிக்குக் காரணமென்ன ?

( 1 ) யுத்தத்தில் வெற்றி பெற்றது
( 2 ) ரத்தின மாலையைக் கண்டது
( 3 ) ஏரியின் அழகில் மயங்கிப் போனது
( 4 ) நாட்டிற்குத் திரும்பி வந்தது ( )

14. முதன்முதலில் தளபதியின் கண்களுக்கு ரத்தின மாலை எப்போது தெரிந்தது ?

( 1 ) அவன் கூடாரம் அமைத்தபோது
( 2 ) அவன் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தபோது
( 3 ) அவன் முதியவரைச் சந்தித்தபோது
( 4 ) அவன் ஏரிக் கரைக்குக் குளிக்க வந்தபோது ( )

15. ரத்தின மாலையை மீட்கத் தளபதி மேற்கொண்ட இரண்டாவது முயற்சி என்ன ?

( 1 ) வீரர்களைக் கொண்டு ஏரியில் குதித்துத் தேடியது
( 2 ) வீரர்களைக் கொண்டு ஏரியிலிருந்த நீரை இறைத்தது
( 3 ) முதியவரிடம் ஆலோசனை கேட்டது
( 4 ) கடவுளிடம் உதவி நாடியது ( )



26

www.testpapersfree.com

16. " ரத்தின மாலை ஏரிக்குள் இருக்க வாய்ப்பில்லை " என்ற முடிவுக்கு முதியவர் ஏன் வந்தார் ?

( 1 ) சுட்டெரித்துக்கொண்டிருந்த சூரியனைக் கண்டதால்

( 2 ) கரையோரத்தில் வளர்ந்திருந்த பனை மரத்தைக் கண்டதால்

( 3 ) வீரர்களின் கடின உழைப்பைப் பார்த்ததால் ( )

( 4 ) தளபதி மேற்கொண்ட முயற்சிகளைக் கேட்டறிந்துகொண்டதால்

17. முதியவர் அறிவுக் கூர்மையுள்ளவர் என்பதை எவ்வாறு அறியமுடிகிறது ?

( 1 ) ரத்தின மாலை இருந்த இடத்தைக் கண்டறிந்ததிலிருந்து

( 2 ) தளபதியின் குழப்பத்தைக் கேட்டறிந்ததிலிருந்து ( )

( 3 ) சன்மானத்தை எதிர்பார்க்காது உதவி புரிந்ததிலிருந்து

( 4 ) ரத்தின மாலைக்கு ஆசைப்படாமல் இருந்ததிலிருந்து



www.testpapersfree.com

சொற்பொருள்

18 முதல் 20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

18. களிப்பில்
(1) களைப்பில்
(2) திருப்தியில்
(3) எண்ணத்தில்
(4) மகிழ்ச்சியில் ( )

19. சிந்தித்தார்
(1) திட்டமிட்டார்
(2) உரைத்தார்
(3) மொழிந்தார்
(4) யோசித்தார் ( )

20. சன்மானம்
(1) அன்பளிப்பு
(2) வெகுமதி
(3) காணிக்கை
(4) சான்றிதழ் ( )



www.testpapersfree.com

கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி :

## ஒலிம்பிக்ஸ் முன்னோடி காற்பந்து போட்டி

நமது தேசிய குழுவுக்கு ஆதரவு அளியுங்கள் !!

சிங்கப்பூர்க் குழுவுடன் மலேசியக் குழு மோதவிருக்கிறது !!

நாள் : 28/2/2011 (சனிக்கிழமை)　　இடம் : காலாங் விளையாட்டரங்கம்
நேரம் : இரவு 8 மணிக்கு

கட்டணம் : பள்ளி மாணவர்களுக்கு இலவசம்
(அடையாள அட்டையைக் காட்டவேண்டும்)
முதியோருக்கு $7 வெள்ளி
ஏனையொருக்கு $12
டிக்கேட் விற்பனை : பிஷான் சமூக மன்றம்

முக்கிய குறிப்புகள் :
ஆதரவாளர்கள் : சிவப்பு ஆடையில் வருதல் நன்று. போத்தல்கள் , குடை போன்ற பொருள்களைக் கொண்டு வராதீர்கள். பாதுகாவலர்கள் உங்கள் பைகளைச் சோதனையிடுவர். நேரத்தோடு வந்துவிடுங்கள். நீரும் பானமும் விற்கப்படும்.

இடைவேளையின்போது உள்ளூர் கலைஞர்கள் பாடி ஆடி உங்களை மகிழ்விப்பர். மேலும் சிறப்புப் போட்டிகள் நடைபெறும். அதிர்ஷ்டசாலிகள் பந்தை வலைக்குள் உதைத்துக் கோல் போட்டுப் பரிசுகள் வெல்லலாம்.

அதிர்ஷ்டக் குலுக்கு ! பத்து பரிசுகள் ! ஒவ்வொருவருக்கும் ஐம்பது வெள்ளி மதிப்புள்ள விளையாட்டுப் பொருள்கள் கிடைக்கும் ! காலணிகள் , தொப்பிகள் , பைகள் என்று கவர்ச்சிமிக்க பல பரிசுகள் காத்திருக்கின்றன.





www.testpapersfree.com

21 முதல் 23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர் , **OAS** விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

21. இந்த விளம்பரம் எதற்காகச் செய்யப்பட்டது ?

(1) ஒலிம்பிக்ஸ் போட்டியைப்பற்றி அறிவிப்பதற்கு

(2) சிங்கப்பூர்க் குழுவிற்கு ஆதரவு திரட்டுவதற்கு ( )

(3) இடைவேளையில் நடைபெறும் போட்டிகளைப்பற்றி அறிவிப்பதற்கு

(4) கவர்ச்சிமிக்க பரிசுகளைப்பற்றி விவரிப்பதற்கு

22. யார் பன்னிரெண்டு வெள்ளி கட்டணம் செலுத்தவேண்டும் ?

(1) பாலர் பள்ளி மாணவர்கள்

(2) முதியோர்கள்

(3) வாலிபர்கள்

(4) சிறுவர்கள் ( )

23. ஏற்பாட்டாளர்கள் பார்வையாளர்களுக்கு விடுத்த வேண்டுகோள் என்ன ?

(1) பார்வையாளர்கள் சிவப்பு ஆடை அணிந்து வரவேண்டுமென்பது

(2) பார்வையாளர்கள் உள்ளூர் கலைஞர்களுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்பது

(3) பார்வையாளர்கள் அடையாள அட்டைகயைக் கொண்டு வர வேண்டுமென்பது

(4) பார்வையாளர்கள் பாதுகாவலரிடம் குடைகளை ஒப்படைக்க வேண்டுமென்பது ( )

முற்றும்



30

www.testpapersfree.com

| 24 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது. |
|---|

" ஆ " பிரிவு

ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குரிய பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| 24. மரத்தில் ஏறிய பூனை இறங்கத் தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தது. அதை மீட்கும் __________ என் சகோதரர்கள் ஈடுபட்டுள்ளார்கள். | 24.( ) |
| 25. விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த ஆப்பிளின் __________ பளபளப்பாக மின்னியது. அவற்றில் ரசாயனம் பூசப்பட்டிருக்கலாம் என்று அம்மா சொன்னார். | 25.( ) |
| 26. உலகில் விலை மதிக்க முடியாத செல்வம் காலம்தான். அதை வீணே கழிப்பதைப் போன்ற மடமை __________. | 26.( ) |
| 27. பயிற்சிக்குத் தாமதமாக வந்த ராமுவைப் பயிற்றுவிப்பாளர் குழுவிலிருந்து __________ வைத்தார். இதை ராமு சற்றும் எதிர்பார்க்கவில்லை. | 27.( ) |
| 28. சீனர்கள் விரும்பி அருந்தும் __________ தேநீர். அவர்கள் தம் வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு அதை வழங்கி உபசரிப்பார்கள். | 28.( ) |

1. விளக்கி
2. வேரில்லை
3. பானம்
4. தோல்
5. தோள்
6. பனியில்
7. வேறில்லை
8. விலக்கி
9. பணியில்
10. பாணம்



31

www.testpapersfree.com

முன்னுணர்வுக் கருத்தறிதல்

கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| மன்னன் ஒருவன் குதிரைகள் வாங்க விரும்பினான். அவன் முன்பின் தெரியாத ஒரு வியாபாரியிடம் அதிக ____ (29) ____ தந்து குதிரைகள் கொண்டு வருமாறு கட்டளையிட்டான். இச்செயல் அமைச்சனுக்கு ____ (30) ____ அளித்தது. மறுநாள் மன்னன் அமைச்சனை அழைத்து நாட்டிலுள்ள முட்டாள்களின் ____ (31) ____ ஒன்றைத் தயாரித்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டான். அமைச்சனும் ____ (32) ____ செய்து மன்னனிடம் சமர்ப்பித்தான். அதில் தன் ____ (33) ____ முதலில் இடம்பெற்றிருப்பதைக் கண்டு மன்னன் அதிர்ந்தான். அதற்கான ____ (34) ____ மன்னன் கேட்டான். | 29.( ) 30.( ) 31.( ) 32.( ) 33.( ) 34.( ) |
| " மன்னா ! முன்பின் தெரியாத ஒருவனிடம் அதிக முன் பணம் கொடுத்து அனுப்பும் ஒருவரை நான் ____ (35) ____ சேர்ப்பது ? " என்று அமைச்சன் கேட்டான். " அப்படியென்றால் , வியாபாரி திரும்பி வரமாட்டான் என்று சொல்கிறாயா ? " என்று மன்னன் கேட்டுவிட்டுச் சிந்திக்கத் தொடங்கினான். அமைச்சனின் பேச்சில் உண்மை இருப்பதை அறிந்தான். | 35.( ) |

| | | |
|---|---|---|
| 1. பட்டியல் | 2. யாரிடம் | 3. வரலாறு |
| 4. நிம்மதி | 5. காரணத்தை | 6. அவ்வாறே |
| 7. மரியைதை | 8. வருத்தத்தை | 9. தொகையை |
| 10. பெயரே | 11. எல்லாவற்றையும் | 12. எதில் |



32

www.testpapersfree.com

சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியைப் கருத்தூன்றிப் படி.

சீனாவில் ஒரு சிறு கிராமத்தில் குவாங் இங் என்ற சிறுவன் வாழ்ந்து வந்தான். அவன் மிகவும் அறிவுள்ள சிறுவன்.அவனுக்குப் படிப்பில் அதிக ஆர்வமிருந்தது. அதைக் கண்டு அவனது பெற்றோர் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள். வறுமையில் வாழ்ந்த அவர்கள் மகனைப் படிக்க வைக்கச் சிரமப்பட்டார்கள். குவாங் இங் ஓராண்டுதான் பள்ளிக்கூடம் போனான். அதற்குள் அவனது தாய் மற்றவர்களின் வயலில் கூலி வேலை செய்தாள். கிடைக்கும் வருவாயைக் கொண்டு இருவரும் காலம் கழித்தார்கள்.

குவாங் இங் ஒரு நாள் பள்ளிக்கூடத்தின் வழியாக நடந்து போய்க்கொண்டிருந்தான். அங்குச் சிறுவர்கள் படித்துக் கொண்டு இருப்பதைப் பார்த்து ,"என்னால் இவர்களைப்போல முறையாகப் பள்ளிக்கூடம் போய்ப் படிக்க முடியவில்லையே!" என்று ஏங்கினான் சன்னல் ஓரமாக நின்று ஆசிரியர் கற்பிப்பதைக் காது கொடுத்துக் கேட்டான். இவ்வாறு தினமும் செய்தால் தாமும் மற்ற சிறுவர்கள் போல கல்வி அறிவு பெறலாம் என்று அவன் நம்பினான். அன்றிலிருந்து, நேரம் கிடைத்த போதெல்லாம், குவாங் இங் பள்ளிகூடத்தின் பக்கமாகப் போய்ச் சன்னல் ஓரத்தில் நின்றான். ஆசிரியர் கற்பித்ததைக் கவனமாகக் கேட்டான். ஏதாவது விளங்கவில்லையென்றால் தன் தாயிடமோ, நண்பர்களிடமோ கேட்டுத் தெளிவுபடுத்திக் கொண்டான். கல்வியின் மீது குவாங் இங் காட்டிய ஆர்வம் அவ்வூரில் வாழ்ந்த திரு வென் என்பவரின் காதுகளுக்கு எட்டியது. அவர் குவாங் இங்கிக்கு ஏதாவது ஒரு வழியில் உதவ விரும்பினார்.

திரு வென், குவாங் இங்கை அழைத்துப் பேசினார். "ஐயா! நான் ஏழை பள்ளிக்கூடம் போய்ப் படிப்பதற்கு எனக்கு வசதியில்லை. நான் உங்களிடம் வேலை செய்கிறேன். நீங்கள் கூலி எதுவும் தரவேண்டாம். அதற்குப் பதிலாக ஒவ்வொரு நாளும் ஒரு நூல் இரவல் கொடுத்தால் போதும்," என்று குவாங் இங் பணிவுடன் சொன்னான். இதற்குத் திரு வென் மகிழ்ச்சியுடன் இணங்கினார். அன்றிலிருந்து குவாங் இங், திரு வென் இட்ட வேலைகளைச் செய்து வந்தான்.ஒவ்வொரு நாளும் வீட்டுக்குப் போகும்போது ஒரு நூலை இரவல் வாங்கிக்கொண்டு போய்ப் படித்தான்.

இப்படியிருக்கும்போது குவாங் இங்குக்கு இன்னொரு சிக்கல் உண்டாயிற்று. இரவில் நூல் படிப்பதற்கு விளக்கு வேண்டுமே! விளக்கும் அதற்குத் தேவையான எண்ணெயும் வாங்குவதற்குப் பணமில்லையே! என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தான். அப்போது பக்கத்து வீட்டிலிருந்து சிறு துவாரங்கள் வழியாக வெளிச்சம் வருவதைக் குவாங் இங் கவனித்தான்.அவன் அன்றிலிருந்து அச்சிறு வெளிச்சத்தில் புத்தகங்களைப் படிக்கலானான்.பக்கத்து வீட்டுக்காரர் விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கும் வரை அவன் படித்துக்கொண்டிருந்தான்.இவ்வாறே, குவாங் இங் பகலில் வேலை செய்து கொண்டு இரவில் படித்து வந்தான். இறுதியில் அவன் ஒரு பெரிய அறிஞன் ஆனான்.



www.testpapersfree.com

36 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது (20 ம.)

36. குவாங் இங்கால் ஏன் தொடர்ந்து பள்ளிக்குப் போய்ப் படிக்க முடியவில்லை? (3 ம.)

____________________________________________

____________________________________________

37) எதற்கு குவாங் இங்கின் மனம் ஏங்கியது? ( 4 ம.)

____________________________________________

____________________________________________

38) குவாங் இங் பள்ளியில் சேராமலேயே எப்படிக் கல்வி கற்றான்? (3 ம.)

____________________________________________

____________________________________________

39) திரு வென் எதற்காகக் குவாங் இங்கை அழைத்துப் பேசினார்? ( 3 ம.)

____________________________________________

____________________________________________



www.testpapersfree.com

40. குவாங் இங் ஒவ்வொரு நாளும் ஒரு நூலைப் படிக்கும் வாய்ப்பை எப்படிப் பெற்றான்? (4 ம.)

41. வீட்டில் விளக்கில்லாத போதும் குவாங் இங் எப்படி இரவில் படித்தான்? (3 ம.)



www.testpapersfree.com

P 5

CA - 1

P -5 தேர்வுத்தாள் -2

மணியும் கணபதியும்...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1)2 | 2) 1 | 3) 2 | 4) 4 | 5) 4 | 6) 3 |
| 7)3 | 8)4 | 9) 2 | 10) 1 | 11) 4 | 12) 4 |
| 13) 1 | 14) 4 | 15)2 | 16) 4 | 17) 1 | 18) 4 |
| 19) 4 | 20) 2 | 21) 2 | 22) 3 | 23) 1 | 24) 9 |
| 25) 4 | 26) 7 | 27) 8 | 28)3 | 29) 9 | 30) 8 |
| 31) 10 | 32)6 | 33)10 | 34) 5 | 35) 12 | |

36) குவாங் இங்கின் தந்தை வியாதியால் மாண்டு போனதாலும் அவன் ஏழையாக இருந்ததாலும் அவனால் தொடர்ந்து பள்ளிக்குப் போய் படிக்க முடியவில்லை.

37) குவாங் இங் பள்ளிக்கூடம் வழியாகச் சென்ற போது சிறுவர்கள் பாடம் படித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தான். அப்போது அவன் மனம் அவர்களைப் போல முறையாகப் பாடம் படிக்க முடியவில்லையே என்று ஏங்கியது.

38) குவாங் இங் நேரம் கிடைத்த போதெல்லாம் பள்ளிக்கூடத்தின் சன்னல் ஓரத்தில் நின்று ஆசிரியர் கற்பித்ததைக் கவனமாகக் கேட்டு பள்ளியில் சேராமலேயே கல்வி கற்றான்.

39)திரு வென் குவாங் இங்கிற்கு ஏதாவது ஒரு வழியில் உதவ விரும்பினார். அதனால் அவனை அழைத்துப் பேசினார்.

40) குவாங் இங் , திரு வென்னின் வீட்டில் வேலை செய்தான். கூலி வாங்குவதற்குப் பதிலாக அவன் தினமும் ஒரு நூலை இரவல் வாங்கிக்கொண்டு படித்தான்.இவ்வாறு குவாங் இங் ஒவ்வொரு நாளும் ஒரு நூலைப் படிக்கும் வாய்ப்பைப் பெற்றான்.

41) இரவில் குவாங் இங் பக்கத்து வீட்டிலிருந்து சிறு துவாரங்கள் வழியாக வரும் வெளிச்சத்தில் படித்தான். பக்கத்து வீட்டுக்காரர் விளக்கை அணைத்து விட்டுப் படுக்கும் வரை அவன் படித்தான்.



www.testpapersfree.com